MysarkariNaukri.Com

# தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்,
## மதுரை மண்டலம்.

இ2/537/25 நாள் : 10.02.2025

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், மதுரை மண்டலத்தில் நெல் கொள்முதல் பருவகால பணிக்கு பட்டியல் எழுத்தர், உதவுபவர் மற்றும் காவலர் பணியிடங்களுக்கு 01.07.2024 அன்று தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டும், கீழ்கண்ட கல்வித் தகுதிகளின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பிற்குட்பட்டு பருவகால பட்டியல் எழுத்தர் (Seasonal Bill clerk), பருவகால உதவுபவர் (Seasonal Helper) பதவிக்கு ஆண் மற்றும் பெண்களிடமிருந்தும், பருவகால காவலர் (Seasonal watchman) பணிக்கு ஆண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன, மாற்றியமைக்கப்பட்ட TamilNadu Civil Supplies Corporation Manual on Paddy Procurement rule chapter VII 16.3 & VII 16.4 ன்படி பருவகால பட்டியல் எழுத்தர்கள் மற்றும் பருவகால உதவுபவர்கள் கல்வி மதிப்பெண் பட்டியலுக்கு 50% மதிப்பெண்ணும், நேர்முக தேர்வுக்கு 50% மதிப்பெண் என்ற அடிப்படையிலும், பருவகால காவலர்களுக்கு 100% மதிப்பெண்களும் நேர்காணல் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள். இப்பணியிடங்கள் நெல்கொள்முதல் தொடர்பானதும், முற்றிலும் தற்காலிகமானதாகும்.

| தேர்வு செய்யப்படும் பதவி | பருவகால பட்டியல் எழுத்தர் (Seasonal Bill Clerk) பெண்கள் உட்பட | | | பருவகால உதவுபவர் (Seasonal Helper) (பெண்கள் உட்பட) | | | பருவகால காவலர் (Seasonal Watchman) (ஆண்கள் மட்டும்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 150 | | | 150 | | | 150 | | |
| பணி நிலை | பருவகால பட்டியல் எழுத்தர் | | | பருவகால உதவுபவர் | | | பருவகால காவலர் | | |
| கல்வித் தகுதி | இளங்கலை அறிவியல் / வேளாண்மை மற்றும் பொறியியல் பட்டம் | | | பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி | | | எட்டாம் வகுப்பு தேர்ச்சி | | |
| தேர்வு செய்யப்படவுள்ள பணியிடங்கள் | SC & SCA/ ST | MBC/ BC/ BC(M) | OC | SC & SCA/ST | MBC/ BC/ BC(M) | OC | SC & SCA/ ST | MBC/ BC/ BC(M) | OC |
| | 26/2 | 31/41/5 | 45 | 25/2 | 32/42/7 | 42 | 24/1 | 30/44/6 | 45 |
| வயது வரம்பு 01.07.2024 அன்று | 37 yrs | 34 yrs | 32 yrs | 37 yrs | 34 yrs | 32 yrs | 37 yrs | 34 yrs | 32 yrs |
| | உரிய விதிகளின்படி அரசால் நிர்ணயிக்கப்பட்ட வயது தளர்வுகள் அனுமதிக்கப்படும். | | | | | | | | |
| குறைந்த பட்ச ஊதியத்தின் அடிப்படையில் (As per Minimum Wages Act) | Rs.5,285 + DA (Rs.5087/-) TA | | | Rs. 5,218 + DA (Rs.5087/-) +TA | | | Rs. 5,218 + DA (Rs.5087/-) +T.A | | |
| விண்ணப்பங்கள் சமர்பிக்க கடைசி நாள் 28.02.2025 | | | | | | | | | |

MySarkariNaukri.Com

மதுரை மாவட்டத்தை இருப்பிடமாக கொண்ட மேற்காணும் தகுதியுடைய ஆண் மற்றும் பெண் விண்ணப்பதாரர்கள் உரிய சான்றுகளுடன் கீழ்கண்ட முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலமாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய மின்னஞ்சல் (Email-id) முகவரியினை விண்ணப்பத்தில் கட்டாயம் குறிப்பிடவேண்டும். அனைத்து தொடர்புகளும் (அழைப்பு கடிதம் போன்றவை) மின்னஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும்.

விண்ணப்பிக்கப்படும் பதவியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் **28.02.2025** மேலும் **28.02.2025** அன்று மாலை **5.00** மணிக்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**விண்ணப்பம் வந்து சேரவேண்டிய முகவரி:**

துணை ஆட்சியர் / மண்டலமேலாளர், த.நா.நு.பொ.வா.கழகம்,
லெவல் 4 பில்டிங், 2–வது தளம், BSNL வளாகம், தல்லாகுளம், மதுரை–625 002.

MysarkariNaukri.Com